# DEPOSITION OF WITNESS
## (Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF : Sessions Court for trial of Communal Clash Cases in Southern Districts, Madurai.

Case No : **SC.No. 03/2009**

Prosecution witness : **54**

| | | | |
|---|---|---|---|
| Name: | அம்மையப்பன் | Caste: | |
| Father'sName : | | Calling: | |
| Village: | | Religion: | |
| Taluk: | | Age: | |

A4,A7, A9 present. A6 already died. Others absent. Petition U/s 317 crpc filed and allowed.

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 on the day of 12.04.2023

**முதல் விசாரணை**:

நான் தற்போது ஓய்வு பெற்று தென்காசி கடயநல்லூார் அருகில் உள்ள கிளாங்காடு என்ற பகுதியில் குடியிருந்து வருகிறேன். நான் முன்னதாக கிராம நிர்வாக அலுவலராக பணியில் இருந்தபோது வட்டாட்சியரின் உத்தரவின் பேரில் காவல் நிலையம் சென்று இடையங்குளம் புரவில் சக்திப்பாண்டியன் என்பவர் தோப்பில் 15.08.2007 ம் தேதி மாலை 4.00 மணியளவில் சக்திப்பாண்டியன் என்பவரை காவல் துறையினர் பிடித்து விசாரித்தார்கள். அவர் இன்று ஆஜராகவில்லை அவரை பார்த்தால் என்னால் அடையாளம் கூற முடியும். என்னுடன் தென்காசி கிராம உதவியாளர் சுப்பையா என்பவரும் உடன் இருந்தார். அவர் ஒரு ஒப்புதல் வாக்குமூலம்

கொடுத்தார். அந்த ஒப்புதல் வாக்குமூலத்தில் சக்திப்பாண்டியன் மற்றும் சிலர் 14.08.2007 அன்று 10.15 மணிக்கு காரில் சென்றுகொண்டிருந்ததாகவும் தென்காசி, மேல முத்தாரம்மன் கோவில் தெரு அருகில் கூலக்கட பஜாரில் இரண்டு ஆட்டோகளிலும் இருசக்கரவாகனத்திலும் வந்தவர்களை சக்திப்பாண்டியனும் அவருடன் வந்தவர்களும் கொலை செய்ததாகவும் அவரது தோப்பில் வைத்து அரிவாளும், இரத்த கரை பட்ட சட்டையும் சக்திப்பாண்டியன் எடுத்து ஆஜர் படுத்துவதாக கூறினார். அதை போலீசார் எழுதிக்கொண்டார்கள். அதில் நானும் சுப்பையாவும் கையொப்பம் செய்தோம். அந்த தோட்டத்தில் உள்ள பம்பு செட்டில் இருந்து சக்தி பாண்டியன் எடுத்து கொடுத்த சட்டையும், அரிவாளும் போலீசார் கைப்பற்றினார்கள். அதற்கு தயாரிக்கப்பட்ட அத்தாட்சியிலும் நானும் சுப்பையாவும் கையொப்பம் செய்தோம். (சாட்சி- எதிரி கொடுத்ததாக கூறப்படும் ஒப்புதல் வாக்குமூலத்தில் குற்றச்செயல் சம்பந்தமாக எதிரி கூறிய விபரங்கள் பற்றி சாட்சியம் அளிக்க தகுதியற்றவர் என்றும் அவரது சாட்சியத்தின் பகுதி ஆட்சேபிக்கப்படுவதாகவும் கூறி வாதிடப்பட்டது. சாட்சியின் வாக்குமூலத்தில் ஏற்கத்ததக்க பகுதிகள் பற்றி இறுதி தீர்ப்பில் ஆய்வு செய்யப்படும் என்ற தீர்வுடன் ஆட்சேபனை பதிவு செய்யப்பட்டது). ஒப்புதல் வாக்குமூலத்தில் அனுமதிக்கப்பட்ட பகுதி **அ.சா.ஆ.** 12 ஆகும். அத்தாட்சி **அ.சா.ஆ.** 13 ஆகும். என்னால் இரத்தக்கரைபட்ட சட்டையையும், அரிவாளையும் அடையாளம் காட்ட முடியும். அந்த அரிவாள் என்னிடம் காட்டப்படுவதுதான். அது **சா.பொ.1** ஆகும். இரத்தக்கரை படிந்த Shelton என்று எழுதப்பட்ட சட்டை **சா.பொ.** 2 ஆகும். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>எதிரிகள்  தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

நான் வேலை பார்ப்பது குத்துக்கல் வலசையாகும். தென்காசி காவல் நிலையத்திற்கும் எங்கள் அலுவலகத்திற்கும் இடையே 3 கிலோ மீட்டர் இடைவெளி இருக்கும். எனக்கு வட்டாட்சியர் எழுத்துமூலமான உத்தரவு எதுவும் வழங்க வில்லை. தொன்காசி காவல் நிலையத்தில் இருநது சக்திப்பாண்டியன் தோட்டம் சுமார் 3 கிலோ மீட்டர் இருக்கும். சக்திப்பாண்டியன் தோட்டத்திற்கு நானும் உதவியாளரும் என்னுடைய இருசக்கரவாகன்ததில் சென்றோம். போலீசார் அவர்கள் ஜுப்பில் வந்தார்கள். அத்தாடசியிலும் ஒப்புதல் வாக்குமூலத்திலும் சக்திபாண்டியனிடம் கையொப்பம் வாங்கினார்களா என்று ஞாபகம் இல்லை. 15.08.2007 அன்று மாலை 4.00 மணிக்கு சக்திப்பாண்டியனுக்கு சொந்தமான தோட்டத்திற்கு போனதாக போலீசார் விசாரணையில் கூறியுள்ளேன். 15.08.2007 அன்று மாலை 4.00 மணிக்கு ஒப்புதல் வாக்குமூலம் பதிவு செய்தார்கள். போலீசர் விசாரணையில் 2.00 மணிக்கு சக்திப்பாண்டியன் ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்தார் என்று கூறவில்லை. தோட்டத்திற்கு சென்றவுடன் சக்திப்பாண்டியனை பிடித்த பின்னர் போலீசார் சோதனை செய்தார்கள். அந்த தோட்டடம் எத்தனை ஏக்கர் பரப்பளவு உள்ளது என்று எனக்கு தெரியாது. அந்த தோட்டத்தின் அருகில் உள்ளவர்கள் பெயர் விபரமும் தெரியாது. ஒப்புதல் வாக்குமூலத்திலும், அத்தாட்சியிலும் காவல் நிலையத்தில் வைத்து கையொப்பம் செய்தேன் என்றால் சரியல்ல. நான் கூறுவதுபோல் என் முன்பாக எந்த சான்றுப்பொருளும் கைப்பற்றபடவில்லை என்றும் சக்திப்பாண்டியன் கைதுசெய்யப்படவில்லை என்றும் அவர் வாக்குமூலம் எதுவும் கொடுக்க வில்லை என்றும் சொன்னால் சரியல்ல. நான் அரசு

ஊழியர் என்பதால் காவல் துறையினர் கேட்டுக்கொண்டதன் பேரில் அவர்களுக்கு ஆதரவாக பொய் சாட்சி சொல்கிறேன் என்றால் சரியல்ல.